# பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 21

1 உள்ளமும் கண்ணீரும் 23

2 இறுகிய உள்ளத்தைவிட்டும் எச்சரிக்கை 29

3 அழுகை – அடியார்களின் உள்ளங்களில் அல்லாஹ் ஏற்படுத்திய கருணை 30

4 நபியவர்களின் அழுகை 32

5 நபித்தோழர்களின் அழுகை 37

6 அபூ பக்ர் ﷺ அவர்களின் அழுகை 39

7 உமர் ﷺ அவர்களின் அழுகை 41

8 உஸ்மான் ﷺ அவர்களின் அழுகை 42

9 அன்னை ஆயிஷா ﷺ அவர்களின் அழுகை 43

10 உம்மு அய்மன் ﷺ அவர்கள் அழுகை 46

11 அப்துற்றஹ்மான் இப்னு அவ்ஃப் ﷺ அவர்களின் அழுகை 47

12 ஸல்மான் ஃபார்ஸீ ﷺ அவர்களின் அழுகை 48

13 அபூ ஹாஷிம் இப்னு உத்பா ﷺ அவர்களின் அழுகை 50

14 அல்லாஹ்வின்மீதுள்ள அச்சத்தால் அழுவதற்கான வழிகள் 51

15 அல்லாஹ்வின் அச்சத்தால் அழுவது தொடர்பாக வந்துள்ள அறிவிப்புகள், சம்பவங்கள் 79

16 அல்லாஹ்வின் அச்சத்தால் அழுவதால் கிடைக்கும் பலன்கள் 83

# ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு

❊

ஷெய்க் ஹுசைன் இப்னு அவ்தா அல்அவாஇஷா அவர்கள் மேற்கு ஆசியாவின் ஜோர்தான் தேசத்தைச் சேர்ந்தவர். தலைநகர் அம்மானில் வசித்துவருபவர். சென்ற நூற்றாண்டின் ஹதீஸ் துறை மாமேதையான இமாம் முஹம்மது நாசிருத்தீன் அல்அல்பானீ ﵀ அவர்களின் முக்கியமான மாணவர். 1999இல் இமாம் அல்அல்பானீ ﵀ உடல் நலிவுற்று அம்மானிலுள்ள மருத்துவமனையில் இறந்த போது, அவர்களின் உடலை ஷெய்க் மஷ்ஹூர் ஹசன் ஸல்மானும் இவர்களும் அங்கிருந்து வீட்டிற்குக் கொண்டு வந்து இமாமவர்களின் வஸிய்யத்துப்படி இறுதிக்கடன்களைத் துரிதமாக நிறைவேற்றித் தாமதமின்றி அடக்கம் செய்தார்கள். இமாமவர்களுடன் இவ்வளவு நெருக்கம் பெற்ற மாணவ அறிஞராக ஹுசைன் அவாஇஷா திகழ்கிறார்கள்.

தமது நூல்களில் ஷெய்குனா (எங்களின் ஆசிரியர்) என்று அல்அவாஇஷா குறிப்பிட்டால் அது இமாம் அல்அல்பானீயைத் தான் சுட்டுவதாக இருக்கும். அந்த அளவிற்கு இமாமவர்களின் கல்விச் செல்வத்திலிருந்து பயனடைந்த ஆளுமைகளில் ஒருவர். ஷெய்க் அவாஇஷா அவர்களை நேரில் கண்ட, அவர்களின் அமர்வுகளில் கல்வி தேடிய மக்கள் அவர்களது பண்புநலன்களை மெச்சி எழுதியிருப்பதே அவர்களைக் குறித்து நமக்குக் கிடைக்கும் குறுந்தகவல்கள். ஏனெனில், தம்மைப் பற்றி பேசுவதை அவர் தவிர்ப்பார். ரியா எனும் முகத்துதிக்கு அஞ்சி தமது நற்செயல்களை மறைத்துக்கொள்வார்.

அஸ்ஸாஹிது (الزاهد) எனும் உலகாசை துறந்த எளியவர்; அல் ஆபிது (العابد) எனும் வணக்கசாலி; பெரும்பாலும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு நோற்பவர்; அதிகம் மவுனத்தைப் பேணி நாவடக்கம் கொள்பவர். அதே சமயம், உள்ளம் தொடும் உபதேசகர்; பேராசிரியர்; முனைவர்; ஆய்வறிஞர்; எழுத்தாளர். இந்த முன்மாதிரிப் பண்புகளால் அஸ்ஸலஃபுப் அஸ்ஸாலிஹ் எனும் நபித்தோழர்களின் தலைமுறையைக் கொள்கையால் மட்டுமின்றி,

குணநலன்கள் வழியாகவும் பின்பற்றுகின்ற ஸலஃபீ அறிஞராக ஷெய்க் திகழ்கிறார்கள். அவர்களது எழுத்துகளும் பேச்சுகளும் ஸலஃப் எனும் நபித்தோழர்கள் காலத்து கொள்கைகளையும் மார்க்கப் புரிதல்களையும் முற்படுத்துகின்றன. குர்ஆன் நபிவழியின் மூல ஆதாரங்களுக்கு முரண்பட்ட நூதன விளக்கங்களை அடையாளம் காட்டி எச்சரிப்பது, ஹதீஸ்களின் தரம் குறித்து தெளிவுபடுத்தி நம்மைப் பண்படுத்துவது இவையே அவர்களின் தனித்துவக் கல்விப்பணியாக அறியப்படுகின்றன.

தொடர்ச்சியான வகுப்புகளை நடத்துகிறார்கள். அவை காணொளிகளாகக் கிடைக்கின்றன. கேள்வி பதில் அமர்வுகளில் உள்ளத்தைப் பண்படுத்தும் பாணியில் அழகிய முறையில் விடையளிக்கிறார்கள். ஷெய்க் அவர்கள் எழுதிய அல்மவ்சூஅத்துல் ஃபிக்ஹிய்யத்துல் முயஸ்ஸறா ஃபீ ஃபிக்ஹில் கிதாபி வஸ்ஸுன்னத்தில் முதஹ்ஹறா (الموسوعة الفقهية الميسرة في فقه الكتاب والسنة المطهرة) எனும் ஃபிக்ஹ் களஞ்சியம் அறிஞர்களால் போற்றப்படுகிற ஒன்று. இது ஏழு தொகுதிகளாக அறபுவில் வெளியாகியுள்ளது. பிறப்பு முதல் இறப்பு வரையிலான இஸ்லாமிய வாழ்வியலின் எல்லா அம்சங்களையும் – சமூகவியல், அரசியல் உட்பட – இத்தொகுதிகள் மூவாயிரம் பக்கங்களில் விளக்குகின்றன. குகைவாசிகள் வெளியீடாகக் கொண்டு வருவதற்கான தமிழாக்கப்பணி தொடங்கி இதுவரை ஐந்தாவது தொகுதியை எட்டியுள்ளோம். முதலும் முடிவுமான உதவி அல்லாஹ்விடமே. இது தவிர, ஷெய்க் அவர்களை எளிய மக்களுக்கு பெருமளவில் அறிமுகம் செய்த ஃபிக்ஹுத் தஅவத்தி வத்தஸ்கியத்திந் நஃப்ஸ் (فقه الدعوة وتزكية النفس) எனும் உளச் சீர்திருத்த வழிகாட்டி தற்போது குகைவாசிகள் வெளியீடுகளாக வந்துகொண்டிருக்கிறது. இந்தப் புத்தகம் அத்தொகுப்பில் உள்ள பதினைந்து நூல்களில் ஒன்று. மற்ற நூல்களும் தமிழ்ப்படுத்தப்பட்டு வெளியாகிவருகின்றன. அல்லாஹ் நாடினால், அனைத்தும் வெளியாகிவிடும். அவனே ஆற்றல் அளிப்பவன். உண்மையான உதவியாளன்.

# 2

## இறுகிய உள்ளத்தைவிட்டும் எச்சரிக்கை

❊

இறுகிய உள்ளத்தைவிட்டும் எச்சரிக்கையாக இருங்கள். அது உங்களை நரகத்தின்பால் கொண்டு சேர்த்துவிடும். இறுகிய உள்ளத்தை விட்டும் அதன்பால் இட்டுச் செல்லும் காரணிகளைவிட்டும் விலகியிருங்கள். அல்லாஹ்வின் அறிவுரைகளைப் புறக்கணித்து விடாதீர்கள். அல்லாஹ் கூறுகின்றான்:

أَلَمْ يَأْنِ لِلَّذِينَ آمَنُوا أَنْ تَخْشَعَ قُلُوبُهُمْ لِذِكْرِ اللَّهِ وَمَا نَزَلَ مِنَ الْحَقِّ وَلَا يَكُونُوا كَالَّذِينَ أُوتُوا الْكِتَابَ مِنْ قَبْلُ فَطَالَ عَلَيْهِمُ الْأَمَدُ فَقَسَتْ قُلُوبُهُمْ وَكَثِيرٌ مِنْهُمْ فَاسِقُونَ

‘அல்லாஹ்வின்மீதும் அவனுடைய தூதரின்மீதும் நம்பிக்கை கொண்டவர்களின் உள்ளங்கள் அவன் நினைவாலும் அவன் குர்ஆனில் இறக்கிய வாக்குறுதி மற்றும் எச்சரிக்கையினாலும் உருகுவதற்கும் நிம்மதியடைவதற்குமான நேரம் வரவில்லையா? தவ்றாத் வழங்கப்பட்ட யூதர்களைப்போன்றும் இன்ஜீல் வழங்கப்பட்ட கிருஸ்தவர்களைப்போன்றும் அவர்கள் இறுகிய உள்ளங்களைப் பெற்றவர்களாக இருக்கமாட்டார்கள். அவர்களுக்கும் தூதர்கள் அனுப்பப்படுவதற்குமான இடைவெளி நீண்டுவிட்டதால் அவர்களின் உள்ளங்கள் இறுகிவிட்டன. அவர்களில் அதிகமானோர் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படாமல் பாவங்கள் புரிபவர்களாகவே இருக்கின்றார்கள்.’ *(குர்ஆன் 57:16)*

இந்த வசனத்திற்கு விளக்கமாக அபூஹாஷிமின் ﷺ அறிவிப்பு இடம்பெற்றுள்ளது. ஆமிர் இப்னு அப்துல்லாஹ் இப்னு சுபைர் அறிவிக்கிறார், அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதற்கும் இந்த வசனம் இறங்குவதற்குமிடையே நான்கு வருடக் கால இடைவெளிதான் இருந்தது. இப்னு அப்பாஸ் இந்த வசனத்திற்கு ‘அவர்கள் உலகின்மீது மோகம் கொண்டு அல்லாஹ்வின் அறிவுரைகளைப் புறக்கணித்தார்கள்’ என்று விளக்கம் கூறுகிறார்.

# 3

## அழுகை[8] – அடியார்களின் உள்ளங்களில் அல்லாஹ் ஏற்படுத்திய கருணை

❋

உஸாமா இப்னு சைத் ﵁ அவர்கள் அறிவிக்கிறார்:

كُنَّا عِنْدَ النَّبِيِّ صلى الله عليه وسلم إِذْ جَاءَهُ رَسُولُ إِحْدَى بَنَاتِهِ يَدْعُوهُ إِلَى ابْنِهَا فِي الْمَوْتِ فَقَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم ارْجِعْ فَأَخْبِرْهَا أَنَّ لِلَّهِ مَا أَخَذَ وَلَهُ مَا أَعْطَى وَكُلُّ شَيْءٍ عِنْدَهُ بِأَجَلٍ مُسَمًّى فَمُرْهَا فَلْتَصْبِرْ وَلْتَحْتَسِبْ فَأَعَادَتِ الرَّسُولَ أَنَّهَا أَقْسَمَتْ لَتَأْتِيَنَّهَا فَقَامَ النَّبِيُّ صلى الله عليه وسلم وَقَامَ مَعَهُ سَعْدُ بْنُ عُبَادَةَ وَمُعَاذُ بْنُ جَبَلٍ فَدُفِعَ الصَّبِيُّ إِلَيْهِ وَنَفْسُهُ تَقَعْقَعُ كَأَنَّهَا فِي شَنٍّ فَفَاضَتْ عَيْنَاهُ فَقَالَ لَهُ سَعْدٌ يَا رَسُولَ اللهِ قَالَ هَذِهِ رَحْمَةٌ جَعَلَهَا اللَّهُ فِي قُلُوبِ عِبَادِهِ وَإِنَّمَا يَرْحَمُ اللَّهُ مِنْ عِبَادِهِ الرُّحَمَاءَ

‘நாங்கள் நபியவர்களுடன் இருந்தோம். அவர்களின் மகள்களில் ஒருவர் (ஸைனப்) நபியவர்களை அழைத்துவருமாறும் அவர் களிடம் தம்முடைய மகன் இறக்கும் தறுவாயில் இருப்பதாகக் கூறுமாறும் ஒருவரை அனுப்பினார். நபியவர்கள் அந்த மனிதரி டம் கூறினார்கள்: ‘அல்லாஹ் எடுத்துக்கொண்டதும் வழங்கியதும் அவனுக்கே உரியது; ஒவ்வொரு விஷயத்திற்கும் அவனிடத்தில் குறிப்பிட்ட தவணை இருக்கின்றது என்று எனது மகளிடம்

8 இமாம் இப்னு கய்யூம் ﵀ கூறுகிறார்: அழுகைகளில் பல வகைகள் உண்டு. அவை, 1. இரக்கத்தினால் ஏற்படும் அழுகை. 2. அச்சத்தினால் ஏற்படும் அழுகை. 3. அன்பினால் ஏற்படும் அழுகை. 4. மகிழ்ச்சியினால் ஏற்படும் அழுகை. 5. பதற்றத்தினால் ஏற்படும் அழுகை. 6. கவலையினால் ஏற்படும் அழுகை. 7. கோழைத்தனத்தினால் ஏற்படும் அழுகை. 8. நயவஞ்சகத்தினால் ஏற்படும் அழுகை. 9. கூலிக்காக இரவலாக அழப்படும் அழுகை. 10. தற்செயலாக ஏற்படும் அழுகை. அதாவது, ஒருவர் அழுதுகொண்டிருக்கும் மக்களைப் பார்த்து அவர்களுடன் சேர்ந்து அழுவது.

கூறுவீராக. பொறுமையைக் கடைப்பிடிக்கும்படியும் நற்கூலியை எதிர்பார்க்கும்படியும் அவருக்குக் கட்டளையிடுவீராக.' அந்த மனிதர் திரும்பி வந்து நபியவர்களிடம், 'நீங்கள் வந்தே தீர வேண்டும் என்று அப்பெண்மணி சத்தியம் செய்துவிட்டார்' என்று கூறினார்.

நபியவர்கள் எழுந்தார்கள். அவர்களுடன் ஸஅது இப்னு உபாதா, முஆது இப்னு ஜபல் ஆகியோரும் எழுந்தார்கள். நானும் அவர் களுடன் சென்றேன். நபியவர்களின் மடியில் சுவாசிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்த அந்தக் குழந்தை கிடத்தப்பட்டது. நபியவர்களின் இரண்டு கண்களும் நீர் சொரிந்தன. உடனே அவர்களிடம் சஅது இப்னு உபாதா, 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்ன இது! நீங்களா அழுகின்றீர்கள்!?' என்று கேட்டார். அதற்கு நபியவர்கள், 'இது அல்லாஹ் தன் அடியார் களில் தான் நாடியவர்களின் உள்ளங்களில் ஏற்படுத்தியுள்ள இரக்க உணர்வாகும். அவன் தன் அடியார்களில் இரக்கமுடைய வருக்கே இரக்கம் காட்டுகிறான்' என்று கூறினார்கள். (புகாரீ 7377)

# 4

## நபியவர்களின்[9] அழுகை

❊

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ﷺ கூறுகிறார்:

قَالَ لِي النَّبِيُّ صلى الله عليه وسلم اقْرَأْ عَلَيَّ قُلْتُ يَا رَسُولَ اللهِ أَقْرَأُ عَلَيْكَ وَعَلَيْكَ أُنْزِلَ قَالَ نَعَمْ فَقَرَأْتُ سُورَةَ النِّسَاءِ حَتَّى أَتَيْتُ إِلَى هَذِهِ الآيَةِ {فَكَيْفَ إِذَا جِئْنَا مِنْ كُلِّ أُمَّةٍ بِشَهِيدٍ وَجِئْنَا بِكَ عَلَى هَؤُلاَءِ شَهِيدًا} قَالَ حَسْبُكَ الآنَ فَالْتَفَتُّ إِلَيْهِ فَإِذَا عَيْنَاهُ تَذْرِفَانِ

(ஒருமுறை) நபிﷺ அவர்கள் என்னிடம், 'எனக்கு (குர்ஆனை) ஓதிக்காட்டுங்கள்!' என்று கூறினார்கள். நான், 'தங்கள் மீதே குர்ஆன் இறக்கப்பட்டுக் கொண்டிருக்க, தங்களுக்கே நான் ஓதிக்காட்டுவதா?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'ஆம்' என்று கூறினார்கள். எனவே, நான் 'அந்நிஸா' எனும் (4வது) அத்தியாயத்தை ஓதினேன். 'ஒவ்வொரு சமுதாயத்திலிருந்தும் (அவர்களின் நபியாகிய) சாட்சியை நாம் (மறுமையில் கொண்டு வரும்போதும், '(நபியே!) உங்களை இவர்களுக்கெதிரான சாட்சியாக நாம் கொண்டுவரும்போதும் (இவர்களின் நிலை) எப்படியிருக்கும்?' எனும் (திருக்குர்ஆன் 4:41வது) வசனத்தை நான் அடைந்தபோது நபிﷺ அவர்கள், 'இத்துடன் போதும்!'

---

9 ஸாதுல் மஆது நூலில் இமாம் இப்னுல் கய்யிம் ﷺ எழுதுகிறார்கள்: 'நபியவர்களின் அழுகை, அவர்களது சிரிப்பு போன்றே ஒரே அளவில் இருக்கும். அவர்களின் சிரிப்பு போலவே அவர்களின் அழுகையும் மிகவும் சப்தம் இல்லாததாகவும், ஆரவாரம் இல்லாததாகவும் இருக்கும். எனினும், அவர்களின் கண்களில் கண்ணீர் நிரம்பி அது வழியத் தொடங்கும். பாத்திரத்தில் நீர் கொதிப்பது போன்ற சப்தம் அவர்களின் நெஞ்சிலிருந்து கேட்கும். இறந்தவர்கள் மீதுள்ள கருணையால், (நரகத்தைப் பற்றிய) பயத்தால், தனது சமுதாயத்தின்மீதுள்ள பாசத்தால், இறையச்சத்தால், குர்ஆன் ஓதுதலைச் செவியுறுவதால் நபியவர்கள் அழுதிருக்கிறார்கள். அந்த அழுகைகள் நீளமானதாக, நேசம் மற்றும் பாசத்தால் ஆனதாக, உள்ளச்சம் மிக்கதாக இருந்தன.'

என்று கூறினார்கள். அப்போது நான் அவர்களைப் பார்த்தேன்; அவர்களின் கண்கள் இரண்டும் கண்ணீரைச் சொரிந்து கொண்டிருந்தன. (ஸஹீஹுல் புகாரீ 5050)

மேற்கண்ட வசனத்திற்கு விளக்கவுரையாக அபூசயீது ﷺ அவர்களின் அறிவிப்பு இடம்பெற்றுள்ளது.

عَنْ أَبِي سَعِيدٍ، قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: يَجِيءُ النَّبِيُّ وَمَعَهُ الرَّجُلَانِ، وَيَجِيءُ النَّبِيُّ وَمَعَهُ الثَّلَاثَةُ، وَأَكْثَرُ مِنْ ذَلِكَ، وَأَقَلُّ، فَيُقَالُ لَهُ: هَلْ بَلَّغْتَ قَوْمَكَ؟ فَيَقُولُ: نَعَمْ، فَيُدْعَى قَوْمُهُ، فَيُقَالُ: هَلْ بَلَّغَكُمْ؟ فَيَقُولُونَ: لَا، فَيُقَالُ: مَنْ يَشْهَدُ لَكَ؟ فَيَقُولُ: مُحَمَّدٌ وَأُمَّتُهُ، فَتُدْعَى أُمَّةُ مُحَمَّدٍ، فَيُقَالُ: هَلْ بَلَّغَ هَذَا؟ فَيَقُولُونَ: نَعَمْ، فَيَقُولُ: وَمَا عِلْمُكُمْ بِذَلِكَ؟ فَيَقُولُونَ: أَخْبَرَنَا نَبِيُّنَا بِذَلِكَ أَنَّ الرُّسُلَ قَدْ بَلَّغُوا فَصَدَّقْنَاهُ، قَالَ: فَذَلِكُمْ قَوْلُهُ تَعَالَى: وَكَذَلِكَ جَعَلْنَاكُمْ أُمَّةً وَسَطًا لِتَكُونُوا شُهَدَاءَ عَلَى النَّاسِ وَيَكُونَ الرَّسُولُ عَلَيْكُمْ شَهِيدًا

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறியதாக அவர் கூறுகிறார்: 'மறுமை நாளில் ஒரு தூதர் வருவார். அவருடன் இரண்டு மனிதர்கள் வருவார்கள். ஒரு தூதர் வருவார். அவருடன் மூன்று மனிதர்கள் வருவார்கள். அதைவிடக் குறைவாகவோ அதிகமாகவோ வருவார்கள். அந்த தூதரிடம், 'நீர் உம் சமூகத்தினருக்கு எடுத்துரைத்துவிட்டீரா' என்று கேட்கப்படும். அதற்கு அவர், 'ஆம்' என்பார். அவருடைய சமூகத்தினர் அழைக்கப்பட்டு விசாரிக்கப்படுவார்கள். 'இவர் உங்களிடம் என் தூதை எடுத்துரைத்து விட்டாரா' என்று அவர்களிடம் கேட்கப்படும். அதற்கு அவர்கள், 'இல்லை' என்பார்கள். உமக்காக சாட்சி கூறுபவர் யார்? என்று அவரிடம் கேட்கப்படும். அதற்கு அவர் 'முஹம்மதும் அவருடைய சமூகத்தினரும்' என்று கூறுவார். முஹம்மதின் சமூகத்தினர் அழைக்கப்பட்டு விசாரிக்கப்படுவார்கள். அதற்கு அவர்கள், 'ஆம், இவர் எடுத்துரைத்துவிட்டார்' என்று கூறுவார்கள். இது குறித்து உங்களுக்கு என்ன தெரியும்? என்று அவர்களிடம் கேட்கப்படும். அதற்கு அவர்கள், 'எங்களின் தூதர், தூதர்கள் தங்களுக்கு இடப்பட்ட கட்டளைகளை எடுத்துரைத்துவிட்டார்கள் என்று எங்களுக்கு அறிவித்தார். நாங்கள் அவர் கூறியதை உண்மையென ஏற்றுக் கொண்டோம்' என்று கூறுவார்கள். பிறகு அறிவிப்பாளர் பின்வரும் வசனத்தைக் கூறினார்:

உங்களைச் சிறந்த, நீதியுள்ள சமூகமாக, கொள்கைகள், வணக்க வழிபாடுகள், பொதுவிவகாரங்கள் ஆகிய விஷயங்களில் நடு

# 8

## உஸ்மான் ﵁ அவர்களின் அழுகை

❊

உஸ்மான் ﵁ அவர்களின் அடிமை ஹானி ﵁ அறிவிக்கிறார்:

كَانَ عُثْمَانُ، إِذَا وَقَفَ عَلَى قَبْرٍ بَكَى حَتَّى يَبُلَّ لِحْيَتَهُ، فَقِيلَ لَهُ: تُذْكَرُ الجَنَّةُ وَالنَّارُ فَلَا تَبْكِي وَتَبْكِي مِنْ هَذَا؟ فَقَالَ: إِنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: إِنَّ القَبْرَ أَوَّلُ مَنْزِلٍ مِنْ مَنَازِلِ الآخِرَةِ، فَإِنْ نَجَا مِنْهُ فَمَا بَعْدَهُ أَيْسَرُ مِنْهُ، وَإِنْ لَمْ يَنْجُ مِنْهُ فَمَا بَعْدَهُ أَشَدُّ مِنْهُ , قَالَ: وَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: مَا رَأَيْتُ مَنْظَرًا قَطُّ إِلَّا وَالقَبْرُ أَفْظَعُ مِنْهُ

‘உஸ்மான் இப்னு அஃப்ஃபான் ﵁ ஒரு அடக்கத்தலத்தில் நின்றால் தம் தாடி நனையுமளவுக்கு அழுவார்கள். அவரிடம் கேட்கப்பட்டது: ‘சுவனத்தையும் நரகத்தையும் நீர் நினைவு கூருகின்றீர். ஆனால், அழுவதில்லை. இதைக் கண்டா அழுகின்றீர்?’ அவர் கூறினார், ‘அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூறினார்கள்: ‘நிச்சயமாக மண்ணறை, மறுமையின் முதல் நிலையாகும். யார் அதிலிருந்து வெற்றிபெற்றுவிட்டாரோ, அதற்குப் பின்னுள்ளவை அவருக்கு இலகுவாகவே இருக்கும். அவர் அதில் வெற்றிபெறவில்லையெனில், அதற்குப் பின் உள்ளவை அதைவிடக் கடுமையானதாகவே இருக்கும்.’ தொடர்ந்து கூறினார், ‘நான் மண்ணறையின் காட்சியைவிடக் கொடூரமான ஒரு காட்சியை ஒருபோதும் நான் கண்டதில்லை என்று நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்.’ *(சுனனுத் திர்மிதீ 2308, ஸஹீஹுத் தர்ஙீப் வத்தர்ஹீப் 3550)*

# 14

# அல்லாஹ்வின்மீதுள்ள அச்சத்தால் அழுவதற்கான வழிகள்

❊

## 1. அவனை அஞ்சுவது, அவனுடைய பாதையில் முயற்சி செய்வது, அவனுக்காக உளத்தூய்மையுடன் செயல்படுவது

அல்லாஹ் கூறுகிறான்:

وَاتَّقُوا اللَّهَ وَيُعَلِّمُكُمُ اللَّهُ

அல்லாஹ்வை அஞ்சுங்கள். அவன் உங்களுக்குக் கற்றுத் தருவான். (குர்ஆன் 2:282)

இந்த வசனத்தில் அல்லாஹ்வை அஞ்சுவது என்பது அவனுடைய கட்டளைகளைச் செயல்படுத்தி அவன் தடுத்துள்ளவற்றிலிருந்து விலகியிருப்பதைக் குறிக்கும். 'அவன் உங்களுக்குக் கற்றுத்தருவான்' என்றால் 'உங்களின் நலன்களை உள்ளடக்கிய சட்டங்களை உங்களுக்குக் கற்றுத்தருவான்' எனப் பொருள். அல்லாஹ் கூறுகிறான்:

وَالَّذِينَ جَاهَدُوا فِينَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا

யார் நம்முடைய பாதையில் முயற்சி செய்கிறாரோ நாம் அவர்களுக்கு நம் பாதைகளைக் காட்டுவோம். (குர்ஆன் 29:69)

நபி ﷺ கூறியதாக அனஸ் ؓ அறிவிக்கிறார்கள்:

ثَلاَثٌ مَنْ كُنَّ فِيهِ وَجَدَ حَلاَوَةَ الإِيمَانِ أَنْ يَكُونَ اللَّهُ وَرَسُولُهُ أَحَبَّ إِلَيْهِ مِمَّا سِوَاهُمَا، وَأَنْ يُحِبَّ الْمَرْءَ لاَ يُحِبُّهُ إِلاَّ لِلَّهِ، وَأَنْ يَكْرَهَ أَنْ يَعُودَ فِي الْكُفْرِ كَمَا يَكْرَهُ أَنْ يُقْذَفَ فِي النَّارِ

யாரிடம் மூன்று பண்புகள் உள்ளனவோ அவர் ஈமானின் சுவையைச் சுவைத்தவர் ஆவார். அவை:

# 15

## அல்லாஹ்வின் அச்சத்தால் அழுவது தொடர்பாக வந்துள்ள அறிவிப்புகள், சம்பவங்கள்

❊

ஜஃபர் இப்னு ஃபுர்கான் ﷺ கூறுகிறார்: 'சல்மான் ஃபார்சீ ﷺ பின்வருமாறு கூறியதாக நாங்கள் கேள்விப்பட்டோம், 'மூன்று விஷயங்கள் என்னைச் சிரிக்க வைக்கின்றன, மூன்று விஷயங்கள் என்னை அழவைக்கின்றன. மரணம் தன்னைப் பின்தொடர்ந்து கொண்டிருக்க உலகின்மீது நம்பிக்கைவைப்பவன்; அலட்சியமாக இருப்பவன். தன் இறைவன் தன்மீது கோபம்கொள்வானா, அல்லது திருப்தியடைவானா என்பதை அறியாதவன் ஆகிய மூவரையும் எண்ணி நான் சிரிக்கிறேன். என்னை அழவைக்கும் மூன்று விஷயங்கள்: முஹம்மதையும் அவருடைய அணியினரையும் விரும்புபவர்களைப் பிரிவது, மரண வேளையில் நிகழும் பயங்கரம், நான் நரகத்திற்குச் செல்வேனா அல்லது சுவனத்திற்குச் செல்வேனா என்பதை அறியாத நிலையில் படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவனுக்கு முன்னால் நிற்பது.'

சுஃப்யான் ஸவ்ரீ ﷺ அறிவிக்கிறார்: 'கஅபாவில் அபூதர் ﷺ எழுந்து நின்று, 'மக்களே! நான் ஜுன்துபுல் ஙிஃபாரியாவேன். உங்களின் நலம்நாடக்கூடிய பிரியமான சகோதரனின் பக்கம் வாருங்கள்' என்றார். மக்கள் நெருங்கி வந்தார்கள். அவர் கேட்டார், 'நீங்கள் பயணம் செய்ய விரும்பினால் அதற்குத் தகுந்த வழித்துணைச் சாதனங்களை எடுத்துக்கொள்ளமாட்டீர்களா?' அதற்கு அவர்கள், 'ஆம். நிச்சயமாக எடுத்துக்கொள்வோம்' என்றார்கள். அவர் கூறினார், 'மறுமைநாளுக்கான பயணம் நீங்கள் விரும்பும் பயணத்தை விட தூரமானது. எனவே, அந்தப் பயணத்திற்கு உங்களுக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்.' மக்கள் கேட்டார்கள், 'அதற்குத் தேவையானது எது?' அவர் கூறினார், 'மகத்தான விஷயங்களுக்காக ஹஜ்ஜு செய்யுங்கள். வெப்பம் மிகுந்த ஒரு நாளில் நோன்பு வையுங்கள். மண்ணறையின் தனிமை நீங்குவதற்

காக இரவின் இருளில் இரண்டு ரக்அத்துகள் தொழுதுகொள்ளுங்கள். மாபெரும் அந்த நாளில் நிற்பதற்காக நல்ல வார்த்தையைக் கூறிக்கொள்ளுங்கள். தீய வார்த்தையைக் கூறாமலிருங்கள். மற்ற விஷயங்களிலிருந்தும் நீங்கள் வெற்றி பெறும்பொருட்டு உங்கள் செல்வங்களிலிருந்து தானம் செய்துகொள்ளுங்கள். உலகை இரண்டு பகுதிகளாக ஆக்கிக்கொள்ளுங்கள். ஒரு பகுதியில் மறுமைக்கானதைத் தேடுங்கள். ஒரு பகுதியில் அனுமதிக்கப்பட்ட வழியில் சம்பாதியுங்கள். மூன்றாவது பகுதி உங்களுக்குப் பயனும் அளிக்காது, தீங்கும் அளிக்காது. எனவே, அதனைத் தேடாதீர்கள். உங்களில் செல்வங்களை இரண்டு பகுதிகளாக ஆக்கிக்கொள்ளுங்கள். ஒரு பகுதியை உங்களின் குடும்பத்தினருக்காகச் செலவு செய்யுங்கள். மறுபகுதியை உங்களின் மறுமை வாழ்வுக்காகச் செலவு செய்யுங்கள்.'

ஸலாம் இப்னு அபீ முதீஃ ﷺ அறிவிக்கிறார்: 'ஹசன் பஸரீ ﷺ அவர்களிடம், அவர் நோன்பு திறக்கும்பொருட்டு ஒரு கோப்பை நீர் கொண்டுவரப்பட்டது. அதை அவருக்கு அருகில் வைத்தபோது அவர் அழுதார். நான் நரகவாசிகளின்

أَنْ أَفِيضُوا عَلَيْنَا مِنَ الْمَاءِ

'எங்கள்மீது கொஞ்சம் நீரைக் கொட்டுங்கள்' (7:50)

என்ற இந்த ஆசையையும் இதற்கு,

إِنَّ اللَّهَ حَرَّمَهُمَا عَلَى الْكَافِرِينَ

'(உணவு, நீர் ஆகிய) அந்த இரண்டையும் அல்லாஹ் நரக வாசிகளின்மீது தடைசெய்துள்ளான்' (7:50)

என்று அளிக்கப்படும் பதிலையும் நினைத்துப் பார்த்தேன்' என்று கூறினார். ஹசன் பஸரீ ﷺ கூறுகிறார்: 'நீங்கள் குறைவான வாழ்நாளைப் பெற்றவர்களாக, பாதுகாக்கப்பட்ட செயலைப் பெற்றவர்களாக, உங்கள் பிடரி நரம்பைவிடச் சமீபத்தில் மரணத்தைப் பெற்றவர்களாக இருக்கின்றீர்கள். எனவே, ஒவ்வோர் இரவும் பகலும் அல்லாஹ்வின் விதியை எதிர்பாருங்கள்; ஒவ்வொரு மனிதனும் தனக்காக சேர்த்துவைத்தவற்றைப் பார்ப்பதற்காக.'

மேலும் கூறுகிறார்: 'ஆதமின் மகனே! நீ நாட்களின் தொகுப்பாக இருக்கின்றாய். ஒருநாள் உன்னைவிட்டுக் கடந்து சென்றுவிட்டால் அது உன்னுடைய சிலபகுதி சென்றுவிட்டதாகும்.'